<u>தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ)</u>

<u>தேனாம்பேட்டை, சென்னை-18</u>

## <u>e-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 06/2025-26/நாள்.15.10.2025</u>

e- ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 06/2025-26/ நாள். 15.10.2025 கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிபந்தனைகளில் தற்போது கீழ்காணும் பணிகளில் / நிபந்தனைகள் திருத்தம் செய்யப்படுகிறது.

<u>ஏற்கனவே அறிவிக்கப்பட்டவை</u>

<table>
<tr><td>127</td><td>சேலம்</td><td>ஏற்காடு</td><td>அணுகு சாலை (EMRS)</td><td>3 மாதம்</td><td>89060</td><td>நான்காம் வகுப்பும் அதற்கு மேலும்</td></tr>
<tr><td rowspan="2">134</td><td rowspan="2">காஞ்சிபுரம்</td><td>ஸ்ரீபெரும் புதூர் ஒன்றியம், காட்ரம்பாக்கம் ஊராட்சி, பழங்குடியினர் குடியிருப்பு</td><td>காட்ரம்பாக்கம் ஊராட்சி பழங்குடியினர் பகுதியில் 63 குடிநீர் குழாய் அமைத்தல்</td><td rowspan="2">3 மாதம்</td><td rowspan="2">8142</td><td rowspan="2">ஐந்தாம் வகுப்பும் அதற்கு மேலும்</td></tr>
<tr><td>ஸ்ரீபெரும் புதூர் ஒன்றியம், காட்ரம்பாக்கம் ஊராட்சி, பழங்குடியினர் குடியிருப்பு</td><td>காட்ரம்பாக்கம் ஊராட்சி பழங்குடியினர் பகுதியில் 650 மீ குடிநீர் நீரேற்றம் செய்திட மெயின் பைப்லைன் அமைத்தல்</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 135 | காஞ்சிபுரம் | ஸ்ரீபெரும் புதூர் ஒன்றியம், மண்ணூர் ஊராட்சி, பழங்குடியினர் குடியிருப்பு | மண்ணூர் ஊராட்சி பழங்குடியினர் பகுதியில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல் | 4 மாதம் | 31600 | ஐந்தாம் வகுப்பும் அதற்கு மேலும் |
| | | ஸ்ரீபெரும் புதூர் ஒன்றியம், மண்ணூர் ஊராட்சி, பழங்குடியினர் குடியிருப்பு | மண்ணூர் ஊராட்சி பழங்குடியினர் பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டுதல் | | | |
| | | ஸ்ரீபெரும் புதூர் ஒன்றியம், மண்ணூர் ஊராட்சி, பழங்குடியினர் குடியிருப்பு | மண்ணூர் ஊராட்சி பழங்குடியினர் பகுதியில் 44 குடிநீர் குழாய் அமைத்தல் | | | |
| | | ஸ்ரீபெரும் புதூர் ஒன்றியம், மண்ணூர் ஊராட்சி, பழங்குடியினர் குடியிருப்பு | மண்ணூர் ஊராட்சி பழங்குடியினர் பகுதியில் 700 மீ குடிநீர் விநியோகம் செய்திட பைப்லைன் அமைத்தல் | | | |
| | | ஸ்ரீபெரும் புதூர் ஒன்றியம், மண்ணூர் ஊராட்சி, பழங்குடியினர் குடியிருப்பு | மண்ணூர் ஊராட்சி பழங்குடியினர் பகுதியில் 700 மீ குடிநீர் நீரேற்றம் செய்திட மெயின் பைப்லைன் அமைத்தல் | | | |

<u>தற்போது திருத்தம் செய்யப்பட்டவை</u>

வ.எண். 127, 134, 135 ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலிருந்து இந்த மூன்று பணிகள் நீக்கப்படுகிறது.

# II- நிபந்தனைகள்

## ஏற்கனவே அறிவிக்கப்பட்டவை

13. (அ). ஒப்பந்ததாரர் இரண்டு மற்றும் அதற்கு மேலும் எண்ணிக்கையில் கட்டுமான பணிகள் (விடுதிகள் பராமரிப்பு, குடியிருப்பு பராமரிப்பு பணிகள் நீங்கலாக) தற்போது செய்து கொண்டிருந்தாலும் (அல்லது) நிலுவையில் வைத்திருந்தாலும் ஒப்பந்ததாரர் இந்த ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ள இயலாது.

(ஆ). ஒரு பணி மட்டும் தற்போது செய்து கொண்டிருந்தாலும் மேற்படி பணி ஒப்பந்த காலத்தை விட கூடுதலாக காலதாமதமாக செய்து கொண்டிருக்கும் ஒப்பந்ததாரர்களும் இந்த ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள இயலாது. (Beyond Agreement period)

14. ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் உள்ள பணிகளில் ஒரு ஒப்பந்ததாரர் பல பணிகளில் பங்கேற்று அவற்றில் இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட பணிகளுக்கு குறைவு ஒப்பந்ததாரராக (Lowest Tenderer) வரபெற்றாலும், இரண்டு பணிகள் மட்டுமே பணி ஆணை வழங்கப்படும். மேலும் ஒப்பந்ததாரர் தன் வசம் உள்ள பணியும் சேர்ந்து இந்ந ஒப்பந்தப்புள்ளில் பங்கேற்று, பணி ஆணை பெறும் பணியும் சேர்ந்து இரண்டு பணிக்கு மேல் வழங்கப்பட மாட்டாது.

## தற்போது திருத்தம் அறிவிப்பு - கோயம்புத்தூர் கோட்டத்திற்கு மட்டும்

13. (அ). ஒப்பந்ததாரர் மூன்று மற்றும் அதற்கு மேலும் எண்ணிக்கையில் கட்டுமான பணிகள் (விடுதிகள் பராமரிப்பு, குடியிருப்பு பராமரிப்பு பணிகள் நீங்கலாக) தற்போது செய்து கொண்டிருந்தாலும் (அல்லது) நிலுவையில் வைத்திருந்தாலும் ஒப்பந்ததாரர் இந்த ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ள இயலாது.

(ஆ). ஒரு பணி மட்டும் தற்போது செய்து கொண்டிருந்தாலும் மேற்படி பணி ஒப்பந்த காலத்தை விட கூடுதலாக காலதாமதமாக செய்து கொண்டிருக்கும் ஒப்பந்ததாரர்களும் இந்த ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள இயலாது. (Beyond Agreement period) எனினும்

மேற்படி பணிகள் 30.11.2025க்குள் முடிக்கப்பட சாத்தியகூறுகள் இருப்பின், ஒப்பந்ததாரர் உரிய பணி முடிப்பதற்கான கால அட்டவணை வழங்கி, தாட்கோ, செயற்பொறியாளர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தாட்கோ, செயற்பொறியாளர்டமிருந்து உரிய சான்றிதழ் பெற்று, பதிவேற்றம் செய்யும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

14. ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் உள்ள பணிகளில் ஒரு ஒப்பந்ததாரர் பல பணிகளில் பங்கேற்று அவற்றில் மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட பணிகளுக்கு குறைவு ஒப்பந்ததாரராக (Lowest Tenderer) வரபெற்றாலும், மூன்று பணிகள் மட்டுமே பணி ஆணை வழங்கப்படும். மேலும் ஒப்பந்ததாரர் தன் வசம் உள்ள பணியும் சேர்ந்து இந்த ஒப்பந்தப்புள்ளில் பங்கேற்று, பணி ஆணை பெறும் பணியும் சேர்ந்து மூன்று பணிக்கு மேல் வழங்கப்பட மாட்டாது.

**மேற்காணும் திருத்தம் செய்யப்பட்ட (வரிசை எண். 13 (அ), (ஆ) 14. தவிர ஏனைய பிற நிபந்தனைகள் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு பின்பற்றப்படும்.**

Note:- In case of any changes / corrections / amendments/ corrigendum in the Tender notice, it will be intimated in the website only. (www.tahdco.com)

இணைப்பு: பணிகளின் விவர அட்டவணை.

மேலாண்மை இயக்குநர்

பெறுநர்.

தாட்கோ ஒப்பந்ததாரர்கள் (தொடர்புடைய கோட்டங்களின் மூலமாக)

நகல் :

1). மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

2).தலைவர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக.

3).அரசு செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தலைமைச்செயலகம், சென்னை - 9 அவர்களுக்கு தகவலுக்காக

4).இயக்குநர், ஆதி திராவிடர் நல இயக்குநரகம், சென்னை - 5 அவர்களுக்கு தகவலுக்காக.

5).மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக.

6).இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை, சென்னை - 5 அவர்களுக்கு தகவலுக்காக.

7). பொது மேலாளர் (நிர்வாகம்) தாட்கோ, தலைமையகம், சென்னை - 18 அவர்களுக்கு தகவலுக்காக.

8).பொது மேலாளர் (வளர்ச்சி) தாட்கோ, தலைமையகம், சென்னை - 18 அவர்களுக்கு தகவலுக்காக.

9).நிதி ஆலோசகர் (ம) தலைமை கணக்கு அலுவலர், தாட்கோ அவர்களுக்கு தகவலுக்காக.

10). அனைத்துக் கோட்ட செயற்பொறியாளர்கள்.

11). அறிவிப்புப் பலகைக்கு